# சம்பளப் பிரச்சினைகள் குறித்து நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை

MINISTRY OF MANPOWER

**1**

உங்கள் முதலாளி **மாதம் ஒருமுறையேனும் உங்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும்.**




சம்பளம் கொடுத்தல்:

- சம்பளக் காலத்தின் இறுதி நாளிலிருந்து ஏழு நாள்களுக்குள்
- கூடுதல் வேலை நேரம் எனில், சம்பளக் காலத்தின் இறுதி நாளிலிருந்து 14 நாள்களுக்குள்

**2**

தங்குவிடுதியில் நீங்கள் தங்கியிருந்தால் **உங்களுடையச் சம்பளம் மின்னியல் முறையில்** (ஜைரோ அல்லது வங்கி மாற்றம்) கொடுக்கப்படவேண்டும்.




**3**




உங்களுடைய கொள்கை அளவிலான ஒப்புதல் (ஐபிஏ) கடிதத்தில் குறிப்பிட்டப்படி **அடிப்படைச் சம்பளம் உங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.**

**4**



சம்பளம் சார்ந்த பிரச்சினைகள் ஏதேனும் இருப்பின், உங்களுடைய முதலாளியிடம் தெளிவுபடுத்திக்கொள்ளுங்கள்

பிரச்சனைத் தீர்க்கப்படாவிட்டால் **FWMOMCare App செயலியில் உங்களுடைய கருத்தைச் சமர்ப்பியுங்கள்.** அல்லது https://www.tal.sg/tadm/eservices. என்ற சர்ச்சை நிர்வாகத்துக்கான முத்தரப்புக் கூட்டணி (டிஏடிஎம்) இணையப்பக்கத்தில் ஒரு கோரிக்கையைச் சமர்ப்பிக்கவும்.

**மேலதிக விவரங்களுக்கு, HTTPS://GO.GOV.SG/MW-RESOURCES செல்லவும்**

# வேலையிடத்தில் காயம் ஏற்பட்டதா?

# வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டப்படி உங்களுக்குக் காப்பீடு உண்டு

MINISTRY OF MANPOWER

வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டம் (WICA) வேலையிடத்தில் நடக்கும் விபத்துக்களிலிருந்து அனைத்து ஊழியர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கிறது. உங்களுக்குக் காயமேற்பட்டால், கீழ்காணும் இழப்பீடுகளை நீங்கள் கோரலாம்:

**1**



**மருத்துவச் செலவுகள்**

**2**



**மருத்துவ விடுப்புக்கான சம்பளம்**

**3**



**நிரந்தர இயலாமை அல்லது மரணம் ஏற்பட்டால் ஒரு மொத்த இழப்பீட்டுத்தொகை**

**4**

உங்களது முதலாளி உங்களுடைய மருத்துவச் செலவுகளையோ மருத்துவ விடுப்புக்கான சம்பளத்தையோ தரவில்லை என்றால் **மனிதவள அமைச்சைக் கீழ் கண்ட வழிகளில் தொடர்புகொள்ளுங்கள்**:

a. **6438 5122 என்ற எண்ணை அழையுங்கள்**

b. **https://go.gov.sg/feedback-wicmatters என்ற இணையப்பக்கத்தில் உங்கள் கருத்துக்களைச் சமர்ப்பியுங்கள்**

அனைத்து விவரங்களும் மிக ரகசியமாக வைக்கப்படும்.




**வேலையிடக் காய இழப்பீடு பற்றிய மேலதிக விவரங்களுக்கு, HTTPS://GO.GOV.SG/WIC-RESOURCES என்ற இணையத்தளத்திற்குச் செல்லவும்.**

# உங்களுடையப் பாஸ்போர்ட்டை உங்களிடமே வைத்திருங்கள்!

MINISTRY OF MANPOWER

**1**

**உங்கள் முதலாளி உங்களுடையப் பாஸ்போர்ட்டை வைத்திருக்கவோ, கொடுக்காமல் இருக்கவோ கூடாது. அவ்வாறு செய்வது சட்டப்படி குற்றம்.**




**2**

உங்களது முதலாளி உங்களுடையப் பாஸ்போர்ட்டைத் தன்னிடம் கொடுத்து வைக்க உங்களை வற்புறுத்தினால் **கீழ் கண்ட வழிகளில் மனிதவள அமைச்சைத் தொடர்புகொள்ளுங்கள்**:

a. **https://go.gov.sg/reportinfringement என்ற இணையத்தளத்திற்குச் செல்லவும்.**
b. **6438 5122 என்ற எண்ணை அழையுங்கள்**
c. **உதவிவேண்டுமென்று https://go.gov.sg/feedback-wicmatters என்ற இணையப்பக்கத்தில் 'ஸூம்' சந்திப்புக்குப் பதியுங்கள்.**

அனைத்து விவரங்களும் மிக ரகசியமாக வைக்கப்படும்.




**பாஸ்போர்ட் வைத்திருப்பது குறித்த மேலதிக விவரங்களுக்கு, HTTPS://GO.GOV.SG/PASSPORTWITHHOLDING-FAQ என்ற இணையத்தளத்திற்குச் செல்லவும்.**